செ.வெ.எண்: 817/2016 நாள்: 22.11.2016

## பத்திரிகைச் செய்தி

**கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் காலியாக உள்ள நான்கு ஈப்பு ஓட்டுநர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகினைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள நான்கு ஈப்பு ஓட்டுநர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளது. இந்த பணியிடங்கள் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் நீங்கலாக முன்னுரிமையற்றோர்)-1, பொதுப்பிரிவு (முன்னுரிமையற்றோர்) -1, ஆதிதிராவிடர் (ஆதரவற்ற விதவை-முன்னுரிமையற்றோர்) -1, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமையற்றோர்) -1 ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அடைகுறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள இன சுழற்சியினைச் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த பதவிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மோட்டார் வாகன சட்டம் 2000 - ன்படி தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட தகுதியான ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். ஐந்து ஆண்டிற்கு குறைவில்லாமல் மோட்டார் வாகனங்களை ஓட்டியமைக்கான நடைமுறை அனுபவம் கொண்டதற்கு சான்று இருக்க வேண்டும்.

01.07.2016 அன்று குறைந்தபட்ச வயது வரம்பு 18 ஆகவும், அதிகபட்ச வயது வரம்பு ஆதிதிராவிடர் இனத்தவர் எனில் 40 மற்றும் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பொது பிரிவினர் எனில் 30 - க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாவட்ட ஆட்சியரக வளர்ச்சிப்பிரிவில் உரிய விண்ணப்பத்தினைப் பெற்றிடவும் மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை உரிய சான்று மற்றும் ஆவணங்களுடன் வளர்ச்சிப்பிரிவில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 07.12.2016 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வந்து சேருமாறு அனுப்பி வைத்திடவும் வேண்டும்.

மேலும் இந்த நியமனம் குறித்த கூடுதல் விபரங்கள் மற்றும் ஈப்பு ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பம் ஆகியவை **www.kanyakumari.nic.in** என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பத்தினை மேற்காணும் இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.